C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

61	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்—	1,42,50,59
	பெரு மொத்தம்	28,46,31,98

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் (முன்னனி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1993 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்.

(அ) நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993-ஆம் ஆண்டு தமிழ்நாடுநிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.